**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.281 /2024**
**வழக்கு சாட்சி DW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.T.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செந்தில்குமார் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : சுப்பாரெட்டியார் | கணவர் பெயர் | : – |
| கிராமம் | : சின்னக்குளிபட்டி | வயது | : சுமார் 48 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 12.03.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், பெரிய குளிப்பட்டி அஞ்சல், சின்னக்குளிபட்டி, சாமாத்தம்மன் தோட்டத்தில் வசிக்கும் சுப்பாரெட்டியார் – சக்கரையம்மாள் தம்பதியினரின் மகன் இந்து சுமார் 48 வயதுள்ள செந்தில்குமார் ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் பிரதிவாதியின் மகன் ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். இ.ம.எண்.02/2026 மனுவானது அனுமதிக்கப்பட்டதின் பேரில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| 01 | 22.09.1921 | வாதியின் தகப்பனார் வேலுச்சாமி ரெட்டியார் பெயரில் உள்ள கிரைய ஆவணம் – சார்பதிவாளர் அலுவலக நகல் | பி.வா.சா.ஆ.1 |

| | | | |
|---|---|---|---|
| 02 | 09.10.1992 | ராமசாமி ரெட்டியார், சுப்பா ரெட்டியார், கிருஷ்ணசாமி ரெட்டியார் ஆகியோர்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் – சார்பதிவாளர் அலுவலக நகல் | பி.வா.சா.ஆ.2 |
| 03 | 24.06.2024 | சுரேஷ்குமார் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் – சார்பதிவாளர் அலுவலக நகல் | பி.வா.சா.ஆ.3 |
| 04 | 03.10.2024 | பட்டா எண்.2795 சுரேஷ்குமார் பெயரில் உள்ள நில உரிமை விபர பட்டியல் – கணினி பதிவிறக்க நகல் | பி.வா.சா.ஆ.4 |

<u>வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>

வாதி எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் ? எனது நிலத்தில் வாதிக்கு நிலம் இருப்பதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் ? 1979ம் ஆண்டு பிறந்தேன். நான் தாக்கல் செய்துள்ள 22.09.1971ம் தேதியிட்ட கிரைய ஆவணம் வாதியின் தகப்பனார் வேலுச்சாமி ரெட்டியார் பெயரில் உள்ள கிரைய ஆவணம் என்றால் ? சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 24.06.2024ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரமானது 22.09.1971ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் தன்மைப்படி தான் வேலுச்சாமி ரெட்டியார் அவரது மகனான வாதிக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் ? கடந்த 1992ம் ஆண்டு பாகப்பிரிவினையில் மேற்படி நிலத்தினை எங்களுக்கு ஒதுக்கிவிட்டார்கள். மொத்தம் 7 ஏக்கர் 48 1/2செண்ட் நிலத்தை எங்களுக்கு பாகப்பிரிவினை எழுதி கொடுத்துவிட்டார்கள். வாதியின் தகப்பனார் வேலுச்சாமிக்கு 22.09.1971ம் தேதியில் கிரையம் பெற்ற சொத்தினை பாகப்பிரிவினை பத்திரத்தில் எந்த இடத்திலும் காட்டப்படவில்லை என்றால் ? சரியல்ல. காட்டியுள்ளார்கள். நான் என்ன படித்துள்ளேன் என்றால் ?10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தை படித்து பார்த்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால்? நான் தாக்கல் செய்துள்ள 09.10.1992ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் வேலுச்சாமி ரெட்டியார் 22.09.1971ம்

தேதியில் கிரையம் பெற்ற சொத்து எந்த இடத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் ? பத்திரத்தில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் சர்வே எண்.116 என்ற புலத்தில் 7 ஏக்கர் 48 1/2செண்ட் நிலம் முழுவதும் எங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும், எந்த இடத்திலும் சொத்துக்கள் எனக்கு ஒதுக்கப்படவில்லை என்றாலும் ? சரியல்ல. சர்வே எண்.116/1ல் மொத்தம் 17 ஏக்கர் 55 செண்ட் என்றால் ? சரிதான். வேலுச்சாமி கிரையம் பெற்ற சொத்தினை தவிர்த்து மற்ற சொத்துக்களை தான் 09.10.1992ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல. வேலுச்சாமி கிரையம் பெற்ற சொத்தையும் சேர்த்து தான் பாகப்பிரிவினை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விஸ்தீரணம் ஏக்கர் 17 செண்ட் 55ல் 3ம் நபர்களும் சொத்தினை கிரையம் பெற்று உட்பிரிவு ஏற்பட்டுவிட்டது என்றால் ? இல்லை. அவ்வாறு உட்பிரிவு ஏற்பட்டதில் தான் தாவா சொத்திற்கு உண்டான பட்டாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? எங்களுக்கு தெரியாமல் பட்டா ஏற்படுத்திவிட்டார்கள் அதை வட்டாட்சியர் அலுவலகத்தில் சொல்லி ரத்து செய்துவிட்டோம். தாவா சொத்தில் வாதி வீடு கட் ட முயற்சி மேற்கொண்டாரா என்றால்? இல்லை. வாதி தாவா சொத்தில் வீடு கட்ட முயற்சி மேற்கொண்டார் என்றாலும், அதை நான் தடுத்துவிட்டேன் என்றாலும் ? சரியல்ல. பாதை அமைக்க மண் கொட்டினார்கள் அதை நான் தடுத்தேன். தாவா சொத்து உள்ள இடத்தில் வாதி வீடு கட்ட எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் ? சரியல்ல. ஆட்சேபனை உள்ளது. வாதி அவருக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் சட்டப்படி வீடு கட்ட முயற்சி மேற்கொண்டுள்ளதை நான் தடுத்ததால் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ? சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் ? சரியல்ல. எனது தரப்பில் விசாரிக்க வேறு சாட்சிகள் உள்ளதா என்றால் ? இல்லை.

Takendown by me in opencourt and
Readover by me and acknowledged
by him/her to be correct.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.03.12 17:29:38 +0530

Sub Judge,
Oddanchatram